இந்திய உச்சநீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. ரஞ்சன் கோகாய்,

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம்.ஜோசப்

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 913/2016

ஹேமுதன் நன்பா காத்வி .... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

குஜராத் மாநிலம் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தண்டனைச் சட்டம், 1860: பிரிவு 376(2)(எஃப்) - இளவர் மீதான பாலியல் வன்கொடுமை - எதிரி - மேல்முறையீட்டாளர் சோதனை அடையாள அணிவகுப்பில் பெண் குற்றமுறையீட்டாளரால் அடையாளம் காணப்பட்டார் - இருப்பினும், ஆறு மாதங்களுக்குப் பிறகு, விசாரணையின் போது சாட்சியமளிக்கும் போது, பெண் குற்றமுறையீட்டாளரும் மற்றொரு இளவர் கண்ணுற்ற சான்றுரைஞரும் பாலியல் வன்கொடுமையை மறுத்தனர் மற்றும் குற்றவாளிக் கூண்டில்

குற்றவாளி அடையாளத்தையும் மறுத்தனர் - விசாரணை நீதிமன்றத்தால் குற்ற விடுதலை - பெண் குற்றமுறையீட்டாளர் மீதான பாலியல் தாக்குதல் மருத்துவ அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டதாகவும், காலப்போக்கில் வழக்கு விசாரணை தாமதமாவதாலும், மேல்முறையீட்டாளர், பெண் குற்றமுறையீட்டாளரை வென்று விட்டார் என்றும், ஆனால் அவருக்கு எதிராகக் கிடைத்த ஆதாரங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு அது மேல்முறையீட்டாளருக்கு உதவ முடியாது என்றும் கூறி ,உயர் நீதிமன்றம் விடுதலை உத்தரவை ரத்து செய்தது - மேல்முறையீட்டில், தீர்வு: அடையாள அணிவகுப்பு சோதனையில், அடையாளம் காணப்பட்டதற்கான உறுதிப்படுத்தல், பெண் குற்றமுறையீட்டாளரின் மருத்துவ அறிக்கையில், மேல்முறையீட்டாளரின் ஆடைகளில் காணப்படும் விந்து மற்றும் மேல்முறையீட்டாளரின் குழு பி பிரிவைச் சேர்ந்த விந்துவுடன் காணப்படுகிறது - யோனி ஸ்மியர் மற்றும் யோனி ஸ்வாப் ஆகியவையும் விந்து இருப்பதை உறுதிப்படுத்துகின்றன - வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள், மேலும் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் தன்மை மேல்முறையீட்டாளர் பாலியல் வன்கொடுமை செய்தவர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியது - குருதி நீரியல் ஆய்வாளர் அளித்த அறிக்கை, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 45 இன் கீழ் ஒரு நிபுணத்துவக் கருத்தாகும், எனவே, முறையாக சான்றாவணமாக சமர்ப்பிக்கப்படாமல் அல்லது வாய்வழி ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்படாமல் சாட்சியங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடியது - பெண் குற்றமுறையீட்டாளர் பிறழ்சாட்சியாக மாறி, குற்றம் சாட்டப்பட்டவர்களில் மேல்முறையீட்டாளரை குற்றவாளிக் கூண்டில் அடையாளம் காணத் தவறியதால், இந்த வழக்கின் தனித்துவமான உண்மைகளில், மற்ற பல ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் விடுதலை செய்யப்பட்டால், அது நீதிக்கு முரணாக இருக்கும் - பிறழ்சாட்சி - சாட்சிய சட்டம், 1872 - பிரிவு 45.

குற்றவியல் நீதி நிர்வாகம் - ஒரு குற்றவியல் விசாரணையில் நீதி வழங்குவது ஒரு தீவிரமான விஷயம், மேலும் முதன்மை அரசு தரப்பு சாட்சிகள் விடுதலைக்கான ஒரு காரணியாக மாற

அனுமதிப்பதன் மூலம் கேலிக்கூத்தாக மாறுவதை அனுமதிக்க முடியாது - தண்டனைச் சட்டம், 1860 - பிரிவு 376 (2) (எஃப்).

இம்மேல்முறையீட்டை அனுமதித்து, மாண்பமை நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது.

தீர்வு: 1. அ.சா.-1 மற்றும் அ.சா.-2 ஆகியோர் சம்பவத்தன்று மருத்துவமனைக்குச் சென்றதை ஒப்புக் கொண்டுள்ளனர். அ.சா.-9 மருத்துவர், அ.சா.-2 மீது நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமையை உறுதிப்படுத்தியுள்ளார். அதே நாளில் அ.சா.-1 பதிவு செய்த மு.த.அ. அ.சா. -12 காவல் உதவி ஆய்வாளரால் நிரூபிக்கப்பட்டது, அவர் சாட்சியின் கூற்றின்படியே அவரால் பதிவு செய்யப்பட்டது என்று கூறினார். மேலும், பெண் குற்றமுறையீட்டாளரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி, பொருட்களை பறிமுதல் செய்து, தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியதையும் அவர் நிரூபித்தார். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 145-ன் கீழ், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 161-ன் கீழ் அவர் மீதான பாலியல் வன்கொடுமையை உறுதிப்படுத்தி அவர் அளித்த வாக்குமூலத்தை, அவர் பிறழ்சாட்சியான பின், கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதாக மாற்றிக் கூறினார். கீழே விழுந்ததால் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அத்தகைய காயம் வீழ்ச்சியால் ஏற்படலாம் என்ற மருத்துவரின் எந்தக் கருத்தும், கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்று நிறுவாது, மாறாக ஒரு கருத்தின் வெளிப்பாடாகவே உள்ளது.

[பத்தி 6] [677-இ-ஜி]

2. மற்றொருவருடன் சந்தேகத்தின் பேரில் மேல்முறையீட்டாளர் கைது செய்யப்பட்டார். 22.02.2004 அன்று தாமதமின்றி சோதனை அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. சோதனை அடையாள அணிவகுப்பு அறிக்கையில் அ.சா. -2 இன் கட்டைவிரல் ரேகை உள்ளது, அவர் தனது

தாயுடன் இருந்தார். சோதனை அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சா.-11 ஆல் முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரை அ.சா.-2 அடையாளம் கண்டார். சோதனை அடையாள அணிவகுப்பில் கணிசமான சவால்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பதை விட, குற்றவாளிக்கூண்டில் அடையாளம் காண்பது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், ஏனெனில் பிந்தையது உறுதிப்படுத்தும் ஆதாரமாகக் கருதப்படுகிறது. ஆனால் குற்றவாளிக்கூண்டில் அடையாளம் காண்பதில் தோல்வியுற்றால், சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பது குறித்து ஆராய முடியாது என்பதை ஒரு உலகளாவிய விதியாக பொதுமைப்படுத்த முடியாது. இது ஒரு வழக்கின் பொருண்மைகளைப் பொறுத்தது. பிற உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைத்தால், சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பது பொருத்தமானதாக இருக்கும், மேலும் ஒட்டுமொத்தமாக பரிசீலிக்கப்பட வேண்டும்.

[பத்தி 7] [677-எச்; 678-ஏ-சி]

பிரகாஷ் வி. கர்நாடக மாநிலம் (2014) 12 எஸ்சிசி 133 சார்வுறப்பட்டது.

3. பெண் குற்றமுறையீட்டாளரின் குடும்பம் ஏழ்மையானது. ஐந்து உடன்பிறப்புகளில் இவரும் ஒருவர். எருமை மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்றபோது அவர் மீது தாக்குதல் நடந்துள்ளது. சம்பவம் நடந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. கட்டாயப்படுத்தல், அச்சுறுத்தல், வற்புறுத்தல் மற்றும் முறையற்ற செல்வாக்கின் மூலம், எதிரி, பெண் குற்றமுறையீட்டாளரையும் அ.சா. -1 ஐயும் வெல்ல போதுமான நேரமும் வாய்ப்பும் இருந்தது என்ற உயர் நீதிமன்றத்தின் வாதத்தில் எந்த குறைபாடும் இல்லை. அ.சா. -2 பிறழ்சாட்சியாக மாறியிருக்கலாம் என்ற உண்மை பொருத்தமற்றது, அவர் மீதான பாலியல்

தாக்குதல் மற்றும் மேல்முறையீட்டாளரை குற்றவாளியாக அடையாளம் காண்பது தொடர்பான ஆதாரங்களை அழிக்காது.

[பத்தி 8] [678-இ-ஜி]

மாநிலம் எதிர் சஞ்சீவ் நந்தா (2012) 8 எஸ்.சி.சி 450 : [2012] 12 எஸ்.சி.ஆர் 881 - சார்வுறப்பட்டது.

4. குற்றவியல் விசாரணை என்பது உண்மைக்கான தேடல் மட்டுமே. விசாரணையின் தன்மை மற்றும் தேவைப்படும் ஆதாரங்கள் ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளையும் பொறுத்தது. நிரபராதி என்ற அனுமானம் பாதிக்கப்பட்டவரின் உரிமைகளுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான சமூக நலனுடனும் சமநிலைப்படுத்தப்பட வேண்டும். எதிரியோ அல்லது பாதிக்கப்பட்டவரோ பொய்யைக் கூறி ஒரு குற்றவியல் விசாரணையைத் திசைதிருப்பவும், அதை அபத்தமான அரங்காக்குவதற்காக சூழ்ச்சிகளில் ஈடுபடவும் அனுமதிக்க முடியாது. ஒரு குற்றவியல் விசாரணையில், நீதி வழங்குவது ஒரு தீவிரமான விஷயம், மேலும் முதன்மை அரசு தரப்பு சாட்சிகள் குற்றவிடுதலைக்கான ஒரு காரணியாக மாற அனுமதிப்பதன் மூலம் கேலிக்கூத்தாக மாறுவதை அனுமதிக்க முடியாது. பெண் குற்றமுறையீட்டாளர் மீதான பாலியல் வன்கொடுமையை மருத்துவ ஆதாரங்கள் உறுதிப்படுத்தவில்லை என்றால், சோதனை அடையாள அணிவகுப்பும் அதன் அடையாளமும் சந்தேகத்திற்குரியவை, உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கவில்லை, முற்றிலும் வேறுபட்ட கருத்துக்கள் எழுந்திருக்கலாம்.

[பத்தி 9] [679-பி-டி]

ஜாஹிரா ஹபிபுல்லா ஷேக் எதிர் குஜராத் மாநிலம் (2006) 3 எஸ்.சி.சி 374 : [2006] 2 எஸ்.சி.ஆர் 1081; மகிளா வினோத் குமாரி எதிர் மத்தியப் பிரதேச மாநிலம் (2008) 8 எஸ்.சி.சி 34 : [2008] 10 எஸ்.சி.ஆர் 869 – சார்வுறப்பட்டது.

5. தற்போதுள்ள வழக்கின் தனித்துவ உண்மைகளில், பெண் குற்றமுறையீட்டாளர் பிறழ்சாட்சியாக மாறி, மேல்முறையீட்டாளரை குற்றவாளிக் கூண்டில் அடையாளம் காணத் தவறியதால், மற்ற பல ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் விடுதலை செய்யப்பட்டால், அது உண்மையில் நீதியை கேலிக்கூத்தாக்கும் செயலாகும்.

[பத்தி 10] [679-டி-இ]

இக்பால் எதிர் உ.பி மாநிலம் (2015) 6 எஸ்.சி.சி 623 : [2015] 6 எஸ்.சி.ஆர் 239 – சார்வுறப்பட்டது.

6. பெண் குற்றமுறையீட்டாளரின் மருத்துவ அறிக்கை மற்றும் பெண் குற்றமுறையீட்டாளர் மற்றும் மேல்முறையீட்டாளரின் ஆடைகளில் கண்டெடுக்கப்பட்ட விந்தணுக்கள் மேல்முறையீட்டாளரின் குழு பி க்கு சொந்தமானவை என்பதும் இணையாக பரிசீலிக்கப்பட்டு சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணல் உறுதிப்படுத்தப்படுகிறது. யோனி ஸ்மியர் மற்றும் யோனி ஸ்வாப் ஆகிய சோதனைகளும் விந்து இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளன. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் மற்றும் கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் தன்மை ஆகியவற்றை உன்னிப்பாக ஆராய்ந்தால், மேல்முறையீட்டாளர் பாலியல் வன்கொடுமை செய்தவர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவுகிறது. குருதி நீரியல் ஆய்வாளர் அறிக்கை என்பது ஆதாரச் சட்டம், 1872 இன் பிரிவு 45 இன் கீழ் ஒரு நிபுணரின் கருத்தாகும், எனவே இது

முறையாக சான்றாவணப்படுத்தாமல் அல்லது வாய்வழி சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படாமல் சான்றுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

[பத்தி 11] [679-ஜி-எச்; 680-ஏ-பி]

நர் சிங் வி. ஹரியானா மாநிலம் (2015) 1 எஸ்.சி.சி 496:[2014] 12 எஸ்.சி.ஆர் 218 - சார்வுறப்பட்டது.

ஷேக் சிந்தா மாதர் எதிர் மாநில அரசின் பிரதிநிதியாக, காவல் ஆய்வாளர் (2016) 11 எஸ்.சி.சி 265 : [2016] 2 எஸ்.சி.ஆர் 936; தாரா சிங் எதிர் மாநிலம், ஏஐஆர் 1951 எஸ்.சி. 441 : [1951] எஸ்.சி.ஆர் 729 – குறிப்பிடப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2016] 2 எஸ்.சி.ஆர். 936	குறிப்பிடப்பட்டது	பத்தி 4
[1951] எஸ்.சி.ஆர். 729	குறிப்பிடப்பட்டது	பத்தி 4
(2014) 12 எஸ்.சி.சி. 133	சார்வுறப்பட்டது	பத்தி 7
[2012] 12 எஸ்.சி.ஆர். 881	சார்வுறப்பட்டது	பத்தி 8
[2006] 2 எஸ்.சி.ஆர். 1081	சார்வுறப்பட்டது	பத்தி 9
[2008] 10 எஸ்.சி.ஆர். 869	சார்வுறப்பட்டது	பத்தி 9
[2015] 6 எஸ்.சி.ஆர். 239	சார்வுறப்பட்டது	பத்தி 10
[2014] 12 எஸ்.சி.ஆர். 218	சார்வுறப்பட்டது	பத்தி 12

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 913/2016

அஹமதாபாத்தில் உள்ள குஜராத் உயர்நீதிமன்றத்தின் 13.01.2016 தேதியிட்ட குற்றவியல் மேல்முறையீடு எண் 1390/2006-இல் வழங்கிய தீர்ப்புரை மற்றும் உத்தரவில் இருந்து

மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர்கள் பூர்விஷ் ஜிதேந்திர மல்கான், செல்வி.தாரிதா பூர்விஷ் மல்கான், பாஸ்கர் சிங், திருமதி தீபா கோரசியா, செல்வி குஷ்பூ வி மல்கான் ஆஜரானார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர்கள் செல்வி ஜெசல் வாஹி, செல்வி விசாகா, செல்வி ஹேமந்திகா வாஹி, மம்தா சிங் ஆஜரானார்கள்.

தீர்ப்புரை

மாண்பமை நீதிமன்றத்தின் பின்வரும் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு.நவீன் சின்ஹா அவர்களால் பகரப்பட்டது.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 376(2)(எஃப்)-ன் கீழ், விசாரணை நீதிமன்றம் அவரை விடுவித்ததை ரத்து செய்த பின்னர், அவருக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.5,000/- அபராதமும் விதித்து உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மேல்முறையீட்டாளர் ஆட்சேபிக்கிறார்.

2. 20.02.2004 அன்று வெள்ளை நிற உடை அணிந்த அடையாளம் தெரியாத, உயரமான, ஒல்லியான நபரால், 9 வயதுள்ள அ.சா.-2, பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார். பெண் குற்றமுறையீட்டாளருடன் வந்த அ.சா.-3 ஜாசிபெனும் இளவர் தான். இது குறித்து சிறுமியின் தாய் அ.சா.-1 அம்பாபெனுக்கு தகவல் தெரிவித்தார். மு.த.அ. அதே நாளில் அ.சா.-1 ஆல் பதிவு

செய்யப்பட்டது. அதே நாளில் அ.சா.-9 மருத்துவர் மேக்னா நரேந்திரபாய் மேத்தாவால் குற்றமுறையீட்டாளரின் மருத்துவ பரிசோதனையும் செய்யப்பட்டது. அ.சா.-2 மீதான பாலியல் தாக்குதல் கன்னித்திரை சிதைவு, புதிய இரத்த கசிவு மற்றும் 1.5 செ.மீ முதல் 2 செ.மீ வரை உடலின் கீழ் பகுதி வரை நீட்டிக்கப்பட்ட காயம் ஆகியவற்றால் நிறுவப்பட்டது. மேல்முறையீட்டாளரும், திருபாய் முலுபாய் தேசாய் என்பவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். 22.02.2004 அன்று சம்பவம் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அ.சா.-11, நிர்வாகத்துறை நடுவர் திலீப்குமார் காந்திலால் ரத்தோட் அவர்களால் சோதனை அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. சோதனை அடையாள அணிவகுப்பு சான்றாவணம் பி-38, தனது தாயுடன் வந்த அ.சா.-2 இன் கட்டைவிரல் ரேகையைக் கொண்டுள்ளது. மேல்முறையீட்டாளரை அ.சா.-2 அடையாளம் கண்டார். ஆறு மாதங்களுக்குப் பிறகு, 31.08.2004 அன்று அ.சா.-2 மற்றும் அ.சா.-3 விசாரணையின் போது சாட்சியமளித்தபோது பாலியல் வன்கொடுமையை மறுத்தார். இதையடுத்து விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை விடுவித்தது.\

3. மாநில அரசின் மேல்முறையீட்டின் பேரில் உயர் நீதிமன்றம், அ.சா. -1 பதிவு செய்த மு.த.அ. அ.சா.-12 காவல்துறை உதவி ஆய்வாளர் பச்சுபாய் பி.கல்சாரியாவால் முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறி, மேல்முறையீட்டாளரை குற்றவாளியாக அறிவித்தது. பெண் குற்றமுறையீட்டாளர் மீதான பாலியல் வன்கொடுமை மருத்துவ அறிக்கையால் உறுதிப்படுத்தப்பட்டது, பெண் குற்றமுறையீட்டாளரின் ஆடைகளில் விந்து இருப்பதை உறுதிப்படுத்தியது, மேலும் மேல்முறையீட்டாளர் குழு பி-யைச் சேர்ந்தவர் என்று தடய அறிவியல் ஆய்வகத்தின் குருதி நீரியல் அறிக்கையால் நிரூபிக்கப்பட்டது, இது பெண் குற்றமுறையீட்டாளரின் ஆடைகளில் இருந்த விந்துவுடன் ஒத்துப்போகிறது. மேல்முறையீட்டாளரின் சோதனை அடையாள அணிவகுப்பு அ.சா.-11 மூலம் நிரூபிக்கப்பட்டது. காலப்போக்கில் வழக்கு விசாரணை தாமதமானதால், மேல்முறையீட்டாளர் வெற்றி பெற்றதாக கருதப்பட்டது, ஆனால் அவருக்கு எதிராக

கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது, அது மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக இருக்க முடியாது என்று கருதப்பட்டது.

4. தண்டனையை எதிர்த்து மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர், சோ.அ.அ. உறுதியான சான்று மட்டுமே என்றும், தண்டனைக்கான நிலைமுறைச் சான்றுகளுக்கு இணையாக அதை வைக்க முடியாது என்றும் வாதிட்டார். மேல்முறையீட்டாளர் குற்றவாளி என்பதற்கான எந்த எள்ளளவுச் சான்றும் இல்லை, மேலும் மேல்முறையீட்டாளரின் குற்றவாளிக்கூண்டில் அடையாளம் காணலும் மறுக்கப்பட்டுள்ளது. ஷேக் சிந்தா மாதர் எதிர் மாநில அரசின் பிரதிநிதியாக காவல்துறை ஆய்வாளர் (2016) 11 எஸ்.சி.சி 265 மற்றும் பிரகாஷ் எதிர் கர்நாடக மாநிலம், (2014) 12 எஸ்.சி.சி, 133 ஆகிய வழக்குகளின் தீர்முடிவுகள் சார்வுறப்பட்டன. குருதி நீரியல் அறிக்கை முறையாக சான்றாவணப்படுத்தவில்லை என்றும், அதன் ஆசிரியர் ஆய்வு செய்யப்படவில்லை என்றும் இறுதியாக வாதிடப்பட்டது. தாரா சிங் எதிர் மாநில அரசு, ஏ.ஐ.ஆர் 1951 எஸ்.சி 441 வழக்கின் தீர்முடிவை அடிப்படையாகக் கொண்டு, குருதி நீரியல் அறிக்கை தொடர்பாக 313 கு.வி.மு.ச, பிரிவின் கீழ் மேல்முறையீட்டாளருக்கு எந்த கேள்வியும் வைக்கப்படவில்லை. எனவே இந்த தண்டனை நிலையானதாக இல்லை.

5. மேல்முறையீட்டை எதிர்த்த அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், பெண் குற்றமுறையீட்டாளர் மீதான பாலியல் வன்கொடுமை மருத்துவ அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார். காலதாமதமின்றி நடத்தப்பட்ட சோ.அ.அ.-யில் மேல்முறையீட்டாளர் அடையாளம் காணப்பட்டார். மேல்முறையீட்டாளரின் ஆடைகளில் பி பிரிவைச் சேர்ந்த விந்து இருப்பதும், பாதிக்கப்பட்டவர் மற்றும் மேல்முறையீட்டாளரின் உடைகளில் இருப்பதும் தண்டனையை நிலைநிறுத்த போதுமானதாக இருந்தது. வறுமையின் காரணமாக அ.சா.-1 மற்றும் 2 ஆகியோர் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ஆறு மாத கால அவகாசத்திற்குள்

சாட்சியளிக்காமலிருக்க நிர்பந்தப்படுத்தப்பட்டு இருந்தால்கூட, அது, மேல்முறையீட்டாளர் செய்த குற்றத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான உத்தரவாதத்தை குறைக்காது.

6. தரப்பினர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலித்தோம். வட்டார மொழியிலிருந்து ஆங்கிலத்தில் தேவையான மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்ட பதிவுகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அ.சா.-1 மற்றும் அ.சா.-2 ஆகியோர் சம்பவத்தன்று மருத்துவமனைக்குச் சென்றதை ஒப்புக் கொண்டுள்ளனர். அ.சா.-9 மருத்துவர், அ.சா.-2 மீது நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமையை உறுதிப்படுத்தியுள்ளார். அதே நாளில் அ.சா.-1 பதிவு செய்த மு.த.அ. அ.சா.-12 காவல்துறை உதவி ஆய்வாளரால் நிரூபிக்கப்பட்டுள்ளது, அவர் சாட்சி கூறியபடியே அவரால் பதிவு செய்யப்பட்டது என்று கூறினார். மேலும், பெண் குற்றமுறையீட்டாளரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி, பொருட்களை பறிமுதல் செய்து, தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியதையும் அவர் நிரூபித்தார். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 145-ன் கீழ், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 161-ன் கீழ் அவர் மீதான பாலியல் வன்கொடுமையை உறுதிப்படுத்தி அவர் அளித்த வாக்குமூலத்தை, அவர் பிறழ்சாட்சியான பின், கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதாக மாற்றிக் கூறினார். கீழே விழுந்ததால் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அத்தகைய காயம் வீழ்ச்சியால் ஏற்படலாம் என்ற மருத்துவரின் எந்தக் கருத்தும், கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்று நிறுவாது, மாறாக ஒரு கருத்தின் வெளிப்பாடாகவே உள்ளது.

7. மற்றொருவருடன் சந்தேகத்தின் பேரில் மேல்முறையீட்டாளர் கைது செய்யப்பட்டார். 22.02.2004 அன்று தாமதமின்றி சோதனை அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. சோதனை அடையாள அணிவகுப்பு அறிக்கையில் அ.சா. -2 இன் கட்டைவிரல் ரேகை உள்ளது, அவர் தனது தாயுடன் இருந்தார். சோதனை அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சா.-11 ஆல் முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரை அ.சா.-2 அடையாளம் கண்டார். சோதனை

அடையாள அணிவகுப்பில் கணிசமான சவால்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பதை விட, குற்றவாளிக்கூண்டில் அடையாளம் காண்பது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், ஏனெனில் பிந்தையது உறுதிப்படுத்தும் ஆதாரமாகக் கருதப்படுகிறது. ஆனால் குற்றவாளிக்கூண்டில் அடையாளம் காண்பதில் தோல்வியுற்றால், சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பது குறித்து ஆராய முடியாது என்பதை ஒரு உலகளாவிய விதியாக பொதுமைப்படுத்த முடியாது. இது ஒரு வழக்கின் பொருண்மைகளைப் பொறுத்தது. பிற உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைத்தால், சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பது பொருத்தமானதாக இருக்கும், மேலும் ஒட்டுமொத்தமாக பரிசீலிக்கப்பட வேண்டும். பிரகாஷ் எதிர் கர்நாடக மாநிலம், (2014) 12 எஸ்.சி.சி 133 இல் இது பின்வருமாறு கவனிக்கப்பட்டது:

> "16.... அப்படியிருந்தும், ஒரு பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி ஒரு சந்தேகத்திற்குரிய நபரை அடையாளம் காணத் தவறுவது அரசுத் தரப்பு வழக்கிற்கு எப்போதும் ஆபத்தானது அல்ல. விஸ்வேஸ்வரன் எதிர் மாநில அரசு வழக்கில் கூறப்பட்டிருப்பதாவது:
>
> 11. ... குற்றம் சாட்டப்பட்டவர்களை சோதனை அடையாள அணிவகுப்பிலோ அல்லது நீதிமன்றத்திலோ அடையாளம் காண்பது என்பது, வழக்கின் சூழ்நிலையிலிருந்து வேறுமுறையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டால், ஒவ்வொரு வழக்கிலும் இன்றியமையா தகுதிக்கூறாக இருக்காது. பல நேரங்களில், குற்றம் சாட்டப்பட்டவர்களை யாராலும் அடையாளம் காண முடியாதபோது இருள் என்ற போர்வையில் குற்றங்கள் செய்யப்படுகின்றன. சூழ்நிலை ஆதாரங்களின் மூலமும் ஒரு குற்றம் நிரூபிக்கப்பட்டு விடலாம்."

8. பெண் குற்றமுறையீட்டாளரின் குடும்பம் ஏழ்மையானது. ஐந்து உடன்பிறப்புகளில் இவரும் ஒருவர். எருமை மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்றபோது அவர் மீது தாக்குதல் நடந்துள்ளது. சம்பவம் நடந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. கட்டாயப்படுத்தல், அச்சுறுத்தல், வற்புறுத்தல் மற்றும் முறையற்ற செல்வாக்கின் மூலம், எதிரி, பெண் குற்றமுறையீட்டாளரையும் அ.சா. -1 ஐயும் வெல்ல போதுமான நேரமும் வாய்ப்பும் இருந்தது என்ற உயர் நீதிமன்றத்தின் வாதத்தில் எந்த குறைபாடும் இல்லை. அ.சா. -2 பிறழ்சாட்சியாக மாறியிருக்கலாம் என்ற உண்மை பொருத்தமற்றது, அவர் மீதான பாலியல் தாக்குதல் மற்றும் மேல்முறையீட்டாளரை குற்றவாளியாக அடையாளம் காண்பது தொடர்பான ஆதாரங்களை அழிக்காது. அரசு எதிர் சஞ்சீவ் நந்தா, 2012 (8) எஸ்.சி.சி 450 என்ற வழக்கில், பிறழ்சாட்சிகள் மற்றும் நீதிமன்றத்தின் கடமை தொடர்பான அவதானிப்புகளும் தற்போதைய சூழலில் பொருத்தமானதாகக் கருதப்படுகின்றன:

> "101.....ஒரு சாட்சி நீதித்துறை செயல்முறையை சீர்குலைக்க பிறழ்சாட்சியாக மாறினால், நீதிமன்றம் மௌனமான முறையில் பார்வையாளராக நிற்கக்கூடாது, உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வர அனைத்து முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். அழுத்தம், தூண்டுதல் அல்லது அச்சுறுத்தலின் கீழ் செயல்படும் ஏமாற்று சாட்சிகளால் குற்றவியல் நீதி முறையை மாற்றியமைக்க முடியாது. மேலும், இ.த.ச. பிரிவு 193 பொய்யான சாட்சியங்களை அளித்ததற்காக தண்டனை வழங்குகிறது, ஆனால் அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது."

9. குற்றவியல் விசாரணை என்பது உண்மைக்கான தேடல் மட்டுமே. விசாரணையின் தன்மை மற்றும் தேவைப்படும் ஆதாரங்கள் ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளையும்

பொறுத்தது. நிரபராதி என்ற அனுமானம் பாதிக்கப்பட்டவரின் உரிமைகளுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான சமூக நலனுடனும் சமநிலைப்படுத்தப்பட வேண்டும். எதிரியோ அல்லது பாதிக்கப்பட்டவரோ பொய்யைக் கூறி ஒரு குற்றவியல் விசாரணையைத் திசைதிருப்பவும், அதை அபத்தமான அரங்காக்குவதற்காக சூழ்ச்சிகளில் ஈடுபடவும் அனுமதிக்க முடியாது. ஜாஹிரா ஹபிபுல்லா ஷேக் எதிர் குஜராத் மாநிலம் (2006) 3 எஸ்.சி.சி 374, மகிளா வினோத் குமாரி எதிர் மத்தியப் பிரதேச மாநிலம் (2008) 8 எஸ்.சி.சி 34 ஆகிய வழக்குகளின் தீர்முடிவுகளின் கருத்தைப் போலவே, ஒரு குற்றவியல் விசாரணையில், நீதி வழங்குவது ஒரு தீவிரமான விஷயம், மேலும் முதன்மை அரசு தரப்பு சாட்சிகள் குற்றவிடுதலைக்கான ஒரு காரணியாக மாற அனுமதிப்பதன் மூலம் கேலிக்கூத்தாக மாறுவதை அனுமதிக்க முடியாது. பெண் குற்றமுறையீட்டாளர் மீதான பாலியல் வன்கொடுமையை மருத்துவ ஆதாரங்கள் உறுதிப்படுத்தவில்லை என்றால், சோதனை அடையாள அணிவகுப்பும் அதன் அடையாளமும் சந்தேகத்திற்குரியவை, உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கவில்லை, முற்றிலும் வேறுபட்ட கருத்துக்கள் எழுந்திருக்கலாம்.

10. தற்போதுள்ள வழக்கின் தனித்துவ உண்மைகளில், பெண் குற்றமுறையீட்டாளர் பிறழ்சாட்சியாக மாறி, மேல்முறையீட்டாளரை குற்றவாளிக் கூண்டில் அடையாளம் காணத் தவறியதால், மற்ற பல ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் விடுதலை செய்யப்பட்டால், அது உண்மையில் நீதியை கேலிக்கூத்தாக்கும் செயலாகும். இக்பால் எதிர் உ.பி. மாநிலம், 2015 (6) எஸ்.சி.சி 623 இல், இது பின்வருமாறு காணப்பட்டது:

> "15. சோதனை அடையாள அணிவகுப்பில் தீவினையாளர்கள் அடையாளம் காணப்பட்டதற்கான சான்று, ஒரு நிலைமுறைச் சான்று அல்ல. சோதனை அடையாள அணிவகுப்பில் சாட்சிகளால் கூட்டுக் கொள்ளையர்களின் அடையாளபடுத்துவதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தண்டனை

வழங்க முடியாது. குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றத்துடன் இணைக்கும் ஆதாரங்களை நிறுவுவதன் மூலம், அதாவது, வழிப்பறிக்கு ஆளான பொருட்கள் மற்றும் குற்றத்தைச் செய்யப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்களை மீட்டெடுப்பது மூலம் அரசுத் தரப்பு கணிசமான ஆதாரங்களை சேர்க்க வேண்டும்."

11. பெண் குற்றமுறையீட்டாளரின் மருத்துவ அறிக்கை மற்றும் பெண் குற்றமுறையீட்டாளர் மற்றும் மேல்முறையீட்டாளரின் ஆடைகளில் கண்டெடுக்கப்பட்ட விந்தணுக்கள் மேல்முறையீட்டாளரின் குழு பி க்கு சொந்தமானவை என்பதும் இணையாக பரிசீலிக்கப்பட்டு சோதனை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணல் உறுதிப்படுத்தப்படுகிறது. யோனி ஸ்மியர் மற்றும் யோனி ஸ்வாப் ஆகிய சோதனைகளும் விந்து இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளன. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் மற்றும் கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் தன்மை ஆகியவற்றை உன்னிப்பாக ஆராய்ந்தால், மேல்முறையீட்டாளர் பாலியல் வன்கொடுமை செய்தவர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவுகிறது. குருதி நீரியல் ஆய்வாளர் அறிக்கை என்பது ஆதாரச் சட்டம், 1872 இன் பிரிவு 45 இன் கீழ் ஒரு நிபுணரின் கருத்தாகும், எனவே இது முறையாக சான்றாவணப்படுத்தாமல் அல்லது வாய்வழி சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படாமல் சான்றுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12. கு.வி.மு.ச. 313 பிரிவின் கீழ் குருதி நீரியல் அறிக்கையை நீதிமன்றம் தன்னிடம் சமர்ப்பிக்கவில்லை என்றும், எனவே, அவர் தனது தரப்புக்கு பாரபட்சமாக நடந்து கொண்டதாகவும் மேல்முறையீட்டாளர் சார்பில் முதல் முறையாக இந்த நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது. குருதி நீரியல் அறிக்கை கிடைத்துவிட்ட நிலையில், அதை மேல்முறையீட்டாளரின் கவனத்திற்கு கொண்டு செல்வதில் விசாரணை நீதிமன்றம் தோல்வியடைந்தது. அரசுத் தரப்பு எந்த ஆதாரத்தையும் சேர்க்கவில்லை அல்லது மறைக்கவில்லை என்று கூற முடியாது. தற்போதைய வழக்கில்

கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு, மேலே விவாதிக்கப்பட்டபடி, நர் சிங் எதிர் ஹரியானா அரசு, (2015) 1 எஸ்.சி.சி 496 இல் நடந்ததைப் போல, அந்த காரணத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு எந்தவித பாரபட்சமும் ஏற்படவில்லை என்று நாங்கள் கருதுகிறோம்:

"32.... குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 இன் கீழ் விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பொருள் ஆதாரங்களை வைக்கத் தவறினால், அத்தகைய ஆதாரங்களை சேர்ப்பதோ அல்லது மறைப்பதோ அரசுதரப்பின் பிழை அல்ல: இது விசாரணை நீதிமன்றத்தின் பிழை மட்டுமே . குற்றத்தால் பாதிக்கப்பட்டவரோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவரோ நீதிமன்றத்தின் மடிமைக்காகவோ அல்லது தவறுதலுக்காகவோ பொறுப்பேற்கக் கூடாது. குற்றவியல் நீதி ஒருதலைப்பட்சமானது அல்ல. இது பல அம்சங்களைக் கொண்டுள்ளது, மேலும் முரண்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு இடையில் ஒரு சமநிலையை நாம் வரைய வேண்டும்.

33. இந்த வழக்கின் பொருண்மைகளுக்கு வரும்போது, தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிக்கை (ம.சா. -12) விசாரணை நீதிமன்றத்தாலும் உயர் நீதிமன்றத்தாலும் நம்பப்பட்டது. குறைபாடுள்ள கு.வி.மு.ச. பிரிவு 313 அறிக்கை குறித்த ஆட்சேபனை விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ எழுப்பப்படவில்லை, மேலும் இந்த கேள்வியை கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் வைக்காதது மற்றும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஏற்படும் பாரபட்சம் இந்த நீதிமன்றத்தில் முதல் முறையாக எழுப்பப்படுகிறது. மேல்முறையீட்டாளர் சுமார் எட்டு ஆண்டுகளாக காவலில் இருப்பதாக எங்கள் கவனத்திற்கு கொண்டு

வரப்பட்டது. விரைவான விசாரணைக்கான குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமை மதிப்புமிக்கது என்றாலும், பாதிக்கப்பட்டவரின் குடும்பம் மற்றும் சமூகத்தின் உரிமையைக் கருத்தில் கொண்டு நீதியின் நலனுக்கு நீதிமன்றம் அடிபணிய வேண்டும்.

13. பொய் சாட்சியம் அளித்ததற்காக, மகிளா வினோத் குமாரி (மேற்படி) வழக்கின் தீர்முடிவைப் போலவே, இவ்வழக்கிலும் கு.வி.மு.ச. பிரிவு 344-ன் கீழ் குற்றமுறையீட்டாளர் மீது வழக்குத் தொடர உத்தரவிடுவதற்கு இது பொருத்தமான வழக்கு. ஆனால், குற்றமுறையீட்டாளருக்கு 9 வயதுதான் ஆகிறது என்பதாலும், 14 ஆண்டுகளுக்கு முன்பு இந்த சம்பவம் நடந்திருப்பதாலும், அவர் திருமணம் செய்து கொண்டு புதிய வாழ்க்கையில் குடியேறியிருக்கலாம் என்பதாலும், இவை அனைத்தும் பாதிக்கப்படக் கூடும் என்பதாலும், அவர் மீது வழக்குத் தொடர உத்தரவிடுவதைத் தவிர்க்கிறோம்.

14. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான

மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "